# ஆசிரியத் தலையங்கங்களுக்குத் தலைப்பிடல்

**யூட் டினேஸ் கொடுதோர்[100]**


**ஆய்வுச் சுருக்கம்**

ஆசிரியத் தலையங்கங்கள் எப்போதும் சமகாலப் பிரச்சினைகளையும் சமுதாய சீர்கேடுகளையும் சர்ச்சைக்குரிய நாட்டு நடப்புக்களையும் ஆராய்ந்து அவற்றினை விளக்கவும் விமர்சிக்கவும் பரிந்துரைக்கவும் பாராட்டவும் செய்கின்றன. ஆசிரியத் தலையங்கங்களை வாசிக்கத் தூண்டுவது ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்பே ஆகும். ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்புக்கள் ஆசிரியத் தலையங்கத்தின் சாராம்சத்தை கூறுவதாகவும் ஆசிரியத் தலையங்கத்தினை ஓரிரு வழிகளில் விளக்குவனவாகவும் அமைகின்றன. அந்தவகையில் பத்திரிகைகள் தமது ஆசிரியத் தலையங்கங்களுக்கு தலைப்பிடுகையில் எவ்வாறான உத்திகளை கையாளுகின்றன என்பதினையும் எந்த முறையினை பின்பற்றுகின்றன என்பதினையும் கண்டறிதலே இவ்வாய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வானது 2014 கார்த்திகை மாதம் முதல் 2015 மாசி மாதம் வரையான நான்கு மாதங்களினை கால எல்லையாக கொண்டு அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதலாம் நிலைத் தரவுகளாக குறிப்பிட்ட நான்கு மாதங்களில் வெளிவந்த ஆசிரியத் தலையங்கங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு இரண்டாம் நிலைத்தரவுகளாக இவ்வாய்வுப் பொருண்மையோடு தொடர்புடைய கட்டுரைகளும், ஆய்வுக் கட்டுரைகளும் நூல்கள் மற்றும் ஆய்வு நூல்கள் போன்றன எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது, ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்புக்களை அடிப்படையாக மேற்கொள்வதினால் ஒப்பிட்டாய்வு மற்றும் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு பத்திரிகையின் நோக்கத்தையும் பின்னணியையும் பணியினையும் அதன் ஆசிரியத் தலையங்கம் விளக்குவதினால், ஆசிரியத் தலையங்கம் மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. ஆகவே ஆசிரியத் தலையங்கம் எழுதும் போது மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் அதன் தலைப்பாகும். அதுவே ஆசிரியத் தலையங்கத்தின் சாராம்சமாகும்.


**பிரதான சொற்கள்:** மும்மொழிப் பத்திரிகை, ஆசிரியத் தலையங்கம், தலைப்பு

## 1.0 ஆய்வறிமுகம்

ஒரு நாளிதழின் செல்வாக்கில் ஆசிரியத் தலையங்கம் பெரும் பங்காற்ற முடியும். ஆசிரியத் தலையங்கம் அப் பத்திரிகையின் நோக்கத்தையும், பணியையும், பின்னணிகளையும் தெளிவாக விளக்குகிறது. இலத்திரனியல் ஊடகங்கள் மத்தியிலும் இன்று வரை நிலைத்திருக்கும் அச்சு ஊடகங்களுள் ஒன்றான பத்திரிகையின் பணி காத்திரமானது.

ஆசிரியத் தலையங்கங்கள் எப்போதும் சமகாலப் பிரச்சினைகளையும், சமுதாயச் சீர்கேடுகளையும், சர்ச்சைக்குரிய நாட்டு நடப்புக்களையும் ஆராய்ந்து அவற்றினை விளக்கவும், விமர்சிக்கவும், பரிந்துரைக்கவும், பாராட்டவும் செய்கின்றன. ஆசிரியத் தலையங்கங்களை வாசிக்கத் தூண்டுவது ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்பே ஆகும். ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்புக்கள் ஆசிரியத் தலையங்கத்தின் சாராம்சத்தை கூறுவதாகவும், ஆசிரியத் தலையங்கத்தினை ஓரிரு வழிகளில் விளக்குவனவாகவும் அமைகின்றன.

## 1.1 பத்திரிகையின் நிறுவன அமைப்பு

பத்திரிகை நிறுவனமானது பிரதானமாக ஐந்து பகுதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. அவை நிர்வாகம், விளம்பரம், ஆசிரியர் பீடம், அச்சகம், விநியோகம் போன்றனவாகும். இந்த ஐந்து பகுதிகளும் ஒருமித்துச் சீராக இயங்கும் போதே பத்திரிகை நிறுவனம் சிறப்பாக இயங்க முடியும். பத்திரிகையின் நிருவாகத்தை நிர்வாகப்பகுதி கவனிக்கின்றது. உரிமையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவர் பத்திரிகை நிறுவனத்தின் தலைவராக பணியாற்றுவார். அவருக்கு உதவியாக பணியாளர் சபை இயங்குகின்றது. பணியாளர் சபையின் உதவியுடன் நிறுவனத்தைத் தலைவர் நிர்வகிக்கின்றார். பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் ஒருவர் நிர்வாகத்தை கவனிப்பார். அவர் நிர்வாகப் பணிப்பாளர் பதவியை வகிக்கின்றார் அவருக்கு கீழ் நிர்வாகப் பகுதி செயற்படுகின்றது.

To whom correspondence should be addressed: sdineshkodi@gmail.com
[100] Lecturer (Prob.), Media Studies, University of Jaffna.

### 1.1 ஆசிரியத் தலையங்கம்.

பத்திரிகையின் முக்கிய பகுதியாக விளங்குவது ஆசிரியத் தலையங்கம், இப்பகுதியினை ஆசிரியர் பக்கம் என்றும் அழைப்பர். ஆசிரியத் தலையங்கங்கள் அப்பத்திரிகையின் ஆசிரியர் பீடக் கொள்கைக்கு ஏற்ப மாறுபட்டிருக்கும். இது அப்பத்திரிகையின் ஆசிரியராலோ அல்லது ஆசிரியக் குழுவாலோ எழுதப்படுகின்றது.

“ஒரு நாளிதழின் செல்வாக்கில் ஆசிரியத் தலையங்கம் பெரும் பங்காற்ற முடியும்” ஒரு பத்திரிகையின் நோக்கங்களையும், பணியையும், பின்னணியையும் இப்பகுதி தெளிவாக விளக்குகிறது. காலத்தின் கண்ணாடியாக விளங்கும் பெருமை, ஆசிரியத் தலையங்கத்திற்கு உண்டு.

ஆசிரியத் தலையங்கங்கள் எப்போதும் சமகாலப் பிரச்சினைகளையும், சமுதாயச் சீர்கேடுகளையும், சர்ச்சைக்குரிய நாட்டு நடப்புக்களையும் அலசி ஆராய்ந்து விளக்கவும் (explain or interpret), விமர்சிக்கவும் (criticize), பரிந்துரைக்கவும் (persuade), பாராட்டவும் (praise) முற்படுகின்ற ஒன்றாகும். இத்தகைய சிறப்புடைய ஆசிரியத்தலையங்கங்களை தகுந்த சான்றாதாரங்களுடன் ஆராய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

### 1.2 தலைப்பிடல்

தலைப்பு, செய்திக் கதையின் மிகவும் முக்கியமான பகுதியாகும். ஒரு செய்திக் கதையின் தலையாக அமைவது செய்தித்தலைப்பாகும். தலைப்புக்களை படிக்கின்ற வாசகர்கள் அதில் பொருள் மயக்கம் கொள்ளாது இலகுவாக புரிந்து கொள்ளத்தக்க விதமாகத் தலைப்புக்கள் அமைக்கப்பட வேண்டும்.

செய்தித் தலைப்புக்கள் உண்மையானவையாகவும், துல்லியமானவையாகவும், தெளிவாக சுருக்கமாக செய்திக் கதையினை விளக்குவதாகவும் அமைதல் வேண்டும்.

**“தலைப்புக்கள் ஒரு பத்திரிகையின் காட்சி யன்னல்கள்” - புறூஸ் வெஸ்லி**

செய்தித் தலைப்புக்களை இரண்டு பிரிவுகளாக பிரித்து நோக்க முடியும்.

1) காட்சி அமைப்பு
2) இயல்பு அமைப்பு

இவ்விரண்டு அடிப்படையிலேயே செய்தித்தலைப்புக்கள் அமைக்கப்படுகின்றது. ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்புக்களும் இதன் அடிப்படையிலே மேற் கொள்ளப்படுகின்றன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலங்களில் பத்து வகையான (10) தலைப்புக்கள் பயன்படுத்தப்பட்டன.

- பிரமிட் வடிவத் தலைப்புக்கள்.
- தலைகீழ் பிரமிட் தலைப்பு
- பனர்தலைப்பு அல்லது முழுப்பக்கத்தலைப்பு
- அடுக்குத் தலைப்பு
- குறுக்குத் தலைப்பு
- இடது பக்கம் சார் அமைப்புத் தலைப்பு,
- வலது பக்கம் சார் அமைப்புத் தலைப்பு
- மையம் சார் அமைப்புத் தலைப்பு
- உடுக்குத் தலைப்பு

- நெற்றித் தலைப்பு

### 1.3 பேசு பொருள்

| | |
|---|---|
| 1. தேர்தல் | 16. மலையகம்,,சமயம் |
| 2. யுத்தம் | 17. சூழல் |
| 3. இனம் | 18. சுகாதாரம் |
| 4. மாகாணசபை | 19. பெண்கள் |
| 5. வட மாகாணசபை | 20. சிறுவர்கள் |
| 6. 100 நாள் திட்டம் | 21. மருத்துவம் |
| 7. உள்நாடஅரசியல் | 22. ஊடகம் |
| 8. வெளிநாட்டுச்செய்தி | 23. இயற்கை அழிவு |
| 9. தீவிரவாதம் | 24. உணவு |
| 10. சட்டம் | 25. அரசியல்கைதிகள் |
| 11. பொருளாதாரம் | 26. ஐ.நா. |
| 12. விடுதலைப்புலிகள் | 27. நினைவூட்டல் |
| 13. இந்தியா | 28. கல்வி |
| 14. மலையகம் | 29. பொது விடயம் |
| 15. விபத்து | 30. விளையாட்டு |

### 1.4 பத்திரிகை

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிப்பத்திரிகைகளின் ஆசிரியத்தலையங்கங்கள் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவருவதனை அவதானிக்க முடிகிறது.

| மொழி | பத்திரிகைகள் |
|---|---|
| தமிழ் | வீரகேசரி |
| | தினக்குரல் |
| | தினகரன் |
| சிங்களம் | Lankadeepa (லங்காதீப) |
| | Dinamina (தினமிண) |
| | Mowbima (மௌபீம) |
| ஆங்கிலம் | Daily Mirror (டெய்லி மிறர்) |
| | The Island (தி ஐலன்ட்) |
| | Daily News (டெய்லி நியூஸ்) |

அட்டவணை- 01 மூலம்- ஆய்வாளன்

ஆசிரியத் தலையங்கங்களே பத்திரிகையின் ஆசிரியப்பீடக் கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன. மேலும் அவை எந்தப் பின்புலத்தைச் சார்ந்து வெளிவருகின்றது என்பதனையும் வெளிப்படுத்துகின்றது.

**1.4 காட்சி அமைப்பின் அடிப்படையில் உருவான தலைப்புக்கள்.**

ஒரு தலைப்பினை நோக்கும் போதே அது எவ்வாறு காட்சியளிக்கப்படுகின்றது என்பதன் அடிப்படையில் தலைப்புக்களுக்கு பெயரிடப்படுகின்றது. அத்தலைப்புக்கள் அமைக்கப்பட்ட விதமே அதன் பெயர்களாக அமைகின்றன.

**1.4.1 தலைகீழ் பிரமிட் தலைப்பு**

தலைகீழ் பிரமிட் தலைப்பானது ஒரு பிரமிட்டை தலைகீழாக கவிழ்த்து வைத்த பாங்கில் அமைக்கப்படும் தலைப்பாகும். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலங்களில் 19% தலைப்புக்கள் தலைகீழ் பிரமிட் முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

மோடியிடமிருந்து அச்சுறுத்தல் வரும்வரை காத்திருக்காதீர்கள் உறவுகளே.
(13.02.2015. தினகரன்)

**1.2.1 பிரமிட் வடிவத் தலைப்புக்கள்.**

பிரமிட் வடிவத் தலைப்பானது மூன்று அல்லது நான்கு வரிகளைக் கொண்டதாக பிரமிட் வடிவ அமைப்பில் அமைக்கப்பட்டிருக்கும்.

உள்நாட்டு போர் மற்றும் இறுதி யுத்தம் தொடர்பான ஆசிரியத் தலையங்கங்களும் இம் முறையினாலே பத்திரிகைகள் பயன்படுத்தியுள்ளன. இம்முறையினை 10% வீதம் பயன்படுத்தியுள்ளன.

புதிய
ஒரு இலங்கைக்கு
அசாதாரணமான முன்னெடுப்புக்கள்
13.01.2015 Mowbima (மௌபீம)

**1.2.2 குறுக்குத் தலைப்பு**

இத்தலைப்பானது இரு பக்கமும் இடைவெளி விட்டு ஒரு பகுதியில் அமைக்கப்பட்டு காணப்படும் செய்தி ஆகும். இது பொதுவான ஒரு வரியிலேயே அமைக்கப்படும் தலைப்பாகும். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நான்கு மாத காலப்பகுதியில் குறுக்குத்தலைப்பையே அதிகமாக மும்மொழி பத்திரிகைகளும் பயன்படுத்தியுள்ளன. 24% தலைப்புக்களும் குறுக்குத் தலைப்புக்களாக உள்ளன.

***Would Pigs Fly?***

**(பன்றிகளால் பறக்க முடியுமா?)** Daily Mirror (டெய்லி மிறர்)

**1.2.3 பனர் தலைப்பு அல்லது முழுப்பக்கத்தலைப்பு**

ஒரே பார்வையில் விடயத்தைத் தெட்டத்தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் தலைப்பு இதுவாகும். குறிப்பிட்ட காலங்களில் தேர்தல் பிரச்சாரங்கள் அதிகம் இடம்பெற்றதாலும், 100 நாள்திட்டம் சூடு பிடித்துக்

காணப்பட்டதாலும் பனர் தலைப்புக்களை மும்மொழி பத்திகள் அதிகமாக பயன்படுத்தி இருந்தமையினை அவதானிக்க முடிகின்றது. 18% தலைப்புக்கள் பனர் தலைப்புக்களாக அமைந்திருந்தன.

**சங்காவும் மகேலவும்.** Lankadeepa (லங்கா தீப) 2.14

**தமிழ்ப் புலிகள்**

Dinamina (தினமிண) 1.24

### 1.3 காட்சி அமைப்பில் உருவான தலைப்புக்களின் எண்ணிக்கை வீதம்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நான்கு மாதங்களில் மும்மொழிகள் அடங்கலாக 1080 ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் காட்சி அமைப்பில் உருவாக்கப்பட்ட தலைப்புக்களின் அளவு வீதம் பின்வருமாறு.

| காட்சி அமைப்பு | வீதம் |
|---|---|
| 1) தலைகீழ் பிரமிட் தலைப்பு | 19% |
| 2) பிரமிட் தலைப்பு | 10% |
| 3) அடுக்குத் தலைப்பு | 05% |
| 4) குறக்குத் தலைப்பு | **24%** |
| 5) பனர்தலைப்பு | 18% |
| 6) இடது பக்கம் சார் அமைந்த தலைப்பு | 08% |
| 7) வலது பக்கம் சார் அமைந்த தலைப்பு | 05% |
| 8) மையம் சார் அமைப்புத் தலைப்பு | 03% |
| 9) உடுக்குத் தலைப்பு | 03% |
| 10) நெற்றித்தலைப்பு | 05% |
| மொத்தம் | 100% |

### 1.4 இயல்பு அடிப்படையில் தலைப்புக்கள்.

தலைப்புக்களினை அதன் இயல்புகளுக்கு ஏற்ப பிரித்து நோக்கப்படுகின்றது. இங்கு தலைப்பின் காட்சி, பொருள், பண்பு, விளக்கம், போன்றன கருத்தில் கொள்ளப்படுகின்றது. இத்தலைப்புக்களை நான்கு பிரதான பகுதிகளாக பிரித்து நோக்க முடியும். இந்த நான்கு இயல்புகளை அடிப்படையாக கொண்டு ஆசிரியத் தலையங்கங்களின் தலைப்புக்கள் அமைக்கப்படுகின்றன.

### 1.5.1 சிறு தொடர்மேல் தலைப்பு அல்லது உந்துத் தலைப்பு.

இடப்பட்டிருக்கும் தலைப்புக்கு மேலே மேலும் சிறிய தலைப்பு இடப்பட்டு அச்சிறு தலைப்பு பிரதான தலைப்பினை விட சிறிய அளவிலும் நீளம் குறைவாகவும் அமைக்கப்படும் போது அது சிறு தொடர்மேல் தலைப்பு எனப்படும். குறிப்பிட்ட நான்கு மாதங்களில் இயற்கை அனர்த்தங்கள், வெளிநாட்டு அரசியல் சார்ந்த விடயங்கள் எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கங்களுக்கு இத்தலைப்புக்களே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- <u>ලංකා ඉන්දියා</u>

  **සබඳතාවල නව හැරවුමක්**

  *(இலங்கை இந்திய உறவில் ஓர் புதிய திருப்பம்.)*

2015.02.16 Dinamina (தினமின)

### 1.5.2 எதிர் உந்துத்தலைப்பு.

உந்துத் தலைப்பின் எதிர் வடிவம் எதிர் உந்துத் தலைப்பாகும் இத்தலைப்பானது விளையாட்டுத் தொடர்பான செய்திகளுக்கும் தேர்தல் சார்ந்த செய்திகளுக்குப் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதினை அவதானிக்க முடிகின்றது.

***Tamil Tigers Running***

***For President.***

***<u>TNA</u>***

(தமிழ்ப் புலிகள் ஜனாதிபதிக்காக ஓடுகிறார்கள்)

*2014.12.31.* Daily News (டெய்லி நியூஸ்)

### 1.5.3 கேள்வித் தலைப்பு

வாசகர்களுக்கு கேள்வி கேட்கும் விதமாக வாசகர்களை சிந்திக்க தூண்டும் வினா எழுப்பி தலைப்புக்கள் அமையும் போது அவை கேள்வித் தலைப்பு எனப்படும். ஜனாதிபதி தேர்தல் காலங்களில் கேள்வித்தலைப்புக்களே ஆசிரியத் தலையங்கங்களில் அதிகம் இடம் பெற்றன.

***ගැටුම් නැති කිරීමේ වගකීම කාටද?***

*(முரண்பாடுகளை இல்லாது செய்வது யாருடைய பொறுப்பு?)*

*2015.01.03* පඬ.ප (மௌபீம)

### 1.5.4 கூற்றுத் தலைப்பு

ஒருவர் குறிப்பிட்ட விடயத்தை அவரது வார்த்தைகளிலேயே குறிப்பிட்டு அவரின் பெயரையும் தெரிவிப்பது கூற்றுத்தலைப்பாகும். வடமாகாண முதலமைச்சர், ஜனாதிபதி, பிரதமர், வடமாகாண ஆளுனர், அமெரிக்க ஜனாதிபதி போன்றோரின் கூற்றுக்களை அமைத்து ஆசிரியத் தலையங்கத் தலைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

***ජනාධිපති ගියොත් ඊළම ස්ථිරයි***

*(ஜனாதிபதி போனால் ஈழம் நிச்சயம்.*

சக்தி வாய்ந்த ஒரு மாற்றம் )

*2014.12.03* ක්නෲඋව (லங்காதீப)

### 1.5.5 இயல்பு அமைப்பின் அடிப்படையில் தலைப்புக்களை அமைத்த ஆசிரியத் தலையங்கங்களின் அளவு வீதம்.

| இயல்பு அமைப்பு | வீதம் |
|---|---|
| 1) சிறு தொடர் மேல் தலைப்பு | 15% |
| 2) எதிர் உந்துத் தலைப்பு | 15% |
| 3) கேள்வத் தலைப்பு | 10% |
| 4) கூற்றுத் தலைப்பு | 60% |

**1.6 ஆசிரியத் தலையங்கங்களுக்கு தலைப்பிடும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.**

தலைப்பிடும் போது அது ஆசிரியர் தலையங்கத்தில் உள்ள ஏதாவது ஒரு விடயத்தைத் தெளிவாக விளக்கும் வகையில் அமைதல் வேண்டும். தலைப்பிட தரப்பட்டுள்ள இடைவெளியினை முழுமையாக நிரப்புவதாக அமைதல் வேண்டும். மேலும் தலைப்பிடும் போது பயன்படுத்தப்படும் குறியீடுகள் தலைப்பினை விளக்குவதாக அமைதல் வேண்டும்.

ஆசிரியத் தலையங்கத்தின் கருவினை அதன் தலைப்பு விளக்குவதாக அமைதல் வேண்டும். மேலும் வாசகர்களுக்கு பொருள் மயக்கம் தராது, தெளிவாக விளங்கும் வண்ணம் அமைத்தல் வேண்டும், வாசகர்களை ஈர்த்து ஆசிரியர் பகுதியினை வாசிக்கச் செய்யுமாறு அமைதல் வேண்டும். இவற்றினை கருத்தில் கொண்ட தலைப்பிடும் போது அது பயனுள்ளதாக அமையும்.

**1.4 நிறைவுரை**

ஆசிரியர் பீடக் கொள்கைக்கு அமைவாகவும் பத்திரிகையின் நோக்கத்தினையும், பின்புலத்தினையும் விளக்குவதாக அமைவது ஆசிரியர் தலையங்கமாகும். இதனாலே ஆசிரியர் தலையங்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நான்கு மாதங்களில் ஆசிரியர் தலையங்கங்கள் முப்பதுக்கும் மேற்பட்ட விடயங்கள் தொடர்பாக பேசியுள்ளன. இவற்றுள் தேர்தல் மற்றும் உள்நாட்டு அரசியல் சார்ந்த விடயத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. அரசியல் சார் விடயங்களை பிரசுரிக்க குறுக்குத் தலைப்பு முறையும், தலைகீழ் பிரமிட் முறை தலைப்புக்களையுமே மும்மொழிப் பத்திரிகைகளும் பயன்படுத்தியுள்ளன. மேலும் தலைப்புக்களின் இயல்பு என்ற அடிப்படையில் நோக்குகையில் கூற்றுத் தலைப்புக்களே அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தற்காலத்தில் ஆசிரியத் தலையங்கங்களினை வாசிப்போரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளன என புதிய உத்திகளினை பயன்படுத்தி, வாசகர்களை கவரும் வண்ணம் தலைப்பிட்டு, பொருள்பட ஆசிரியத்தலையங்கம் அமைக்கப்பட்டால் வாசகர் வட்டம் இதற்கு இன்னும் அதிகரிக்கும்.


**உசாத்துணை நூல்கள்**

- **தமிழ் நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள்**

**1) நூல்கள்**

1. இளங்கோவன்.மா.ரா <u>இதழியல் நோக்கு</u>, வெற்றி அச்சகம், சென்னை, 5 ஜீலை 1981
2. இராசா. கி. <u>இதழியல்</u>, தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை, முதலாம் பதிப்பு 2005
3. இன்னாசி,மா.எட்வர்ட் சாலமோன் ராஜா, இதழியல் அவ்வை அச்சுக்கூடம், சென்னை
4. கிருட்டினசாமி.வெ. <u>தகவல் தொடர்பியல்,</u> மணிவாசகர் பதிகம், சென்னை டிசெம்பர் 2006
5. முத்துராசன்.கு <u>இதழியல்</u>, வானவில் புத்தகாலயம், சென்னை, டிசெம்பர் 2006
6. முத்துராசன்.கு. <u>இதழியல் வளர்ச்சியும் மொழிபெயர்ப்பும்,</u> ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு ஜீலை 2001
7. மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு, பத்திரிகையியல், <u>உலகப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும்</u>, சென்னை முதல் பதிப்பு ஜீலை 2001

**2) ஆய்வுக்கட்டுரைகள்**

1. கிருத்திகா.த, கவிதாஜினி.செ, <u>இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கள் ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு,</u> Proceeding of Jaffna University Intentional Research Conference (Juice 2014).
2. ரஞ்சிதமலர்.அ, (2005) <u>யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி மேம்பாட்டில் 1930 – 1980 காலப்பகுதியில் வெகுஜன ஊடகங்களின் பங்களிப்பு,</u> ஆய்வுக்கட்டுரை முதுகலைமானி படத்திற்குரியது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

➢ **ஆங்கில நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள்**

**1) நூல்கள்**

1. Thomas Rolnicki, Sxholastical journalism, edition – 11, blackewel publishing, LTD, Uk, 2007

**2) ஆய்வுக்கட்டுரைகள்**

01. Alieza Bonyadi, Moses Samuel (2014), Headlines in Newspaper Editorials, A Contrastive study, Islamic Azad university of Malaysia, SAGE OPEN publication.

02. Angela M. Lee (2012 april 21), audience preference and Editorial judgment A study of time – Lagged influence in online News, School of journalism, the university of Texan at Austin.